DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.II, Mayiladuthurai

**CC. No. 54/2020**

**Deposition of LW9 examined as PW8** Dt. 08.07.2025

| | |
|---|---|
| Name | ராஜதுரை (Rtd SI of Police) |
| Father's/Husband's Name | அழகர் |
| Village | நெப்பத்தூர் |
| Taluk | |
| Age | 63/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 08.07.2025

(A2,A3 present. A1,A4 called absent. U/s. 355 BNSS petition filed and allowed )

**முதல் விசாரணை**

நான் காவல் துறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று தற்போது மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். பாகசாலை காவல் நிலைய குற்ற எண்.38/2019 ஆக சிறப்பு உதவி ஆய்வாளர் சங்கர் என்பவரால் பதிவு செய்யப்பட்ட வழக்கை மேல் விசாரணை செய்யும் பொருட்டு என் பார்வைக்கு வைத்ததை நான் புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் திருமேனி, சுதாகர் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **(பார்வை மகசர் அ.சா.ஆ.3 மற்றும் மாதிரிவரைபடம் அ.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.)** பட்டியல் சாட்சிகள் ராஜேஸ்வரி, இளஞ்செழியன், மனோகரன், செந்தில் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலத்தினை தனிதனியே பதிவு செய்தேன். பட்டியல் சாட்சிகளை விசாரணை செய்ததில் குற்ற சம்பவம் உண்மை என தெரிய வந்ததில் எதிரிகளை தேடிய போது எதிரிகள் அனைவரும் மாண்புமிகு நாகபட்டினம் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றுவிட்டபடியால் அவர்களை கைது செய்ய இயலவில்லை. இவ்வழக்கில் காயம்பட்ட அ.சா.1,2 க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் அருண்ராஜ்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிந்து அவர் கொடுத்த காயச்சான்றுகளை பெற்றேன். அ.சா.1 ராஜேஸ்வரி என்பவர் தொடர் சிகிச்சைக்கு ஒத்துழைப்பு அளிக்காததால் அவருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை குறித்து சான்று வழங்க இயலாது என்று சான்று வழங்கியுள்ளார். அ.சா.2 க்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என சான்று வழங்கியுள்ளார். **(விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றுகள் முறையே அ.சா.ஆ.5,6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சங்கர் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் எதிரிகள் மீதான விசாரணையை முடித்து 13.02.2020 ம் தேதி இதச 294(b),323,354,506(1) ஆகிய சட்ட பிரிவுகளின் கீழ் இறுதி அறிக்கையினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

புகார் பெறப்பட்டு ஆறு நாட்கள் காலதாமதமாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் நிலைய மனு எண் கொடுக்கப்பட்டு விசாரணைக்கு பின் பதிவு செய்யப்பட்டது. பாகசாலை காவல் நிலைய குற்ற எண்.37/2019 மற்றும் பாகசாலை காவல் நிலைய குற்ற எண்.38/2019 ஆகிய இரண்டு வழக்குகளிலும் நான் தான் புலன்விசாரணை அதிகாரி என்றால் சரிதான். இரு வழக்குகளிலும் சாட்சிகளை ஒரே நாளில் தான் விசாரித்தேனா என்றால் சரிதான். எனது விசாரணையில் அவர்களுக்குள் என்ன முன் விரோதம் என தெரிந்து கொண்டேனா என்றால் இடப்பிரச்சனை சம்பந்தமான முன்விரதம் என தெரிந்து கொண்டேன். தேர்தல் சம்பந்தமான பிரச்சனை என தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. அ.சா.2-ம், அந்த ஊரில் உள்ள ராஜேந்திரன் என்பவரும் உறவுக்காரர்கள் என்பதை எனது விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொள்ளவில்லை. 1-வது எதிரியின் மனைவியும், மேற்படி ராஜேந்திரன் என்பவரது மனைவியும் தேர்தலில் போட்டியிட்டு 1-வது எதிரியின் மனைவி வெற்றி பெற்றார் என்றால் சரிதான். இதன் அடிப்படையில் தான் அவர்களுக்குள் முன்விரோதம் என்று விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. இவ்வழக்கில் ஆயுதங்களோ, தடையபொருட்களோ கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். தேர்தல் காரணமாக ராஜேந்திரன் என்பவரின் தூண்டுதலின் பேரில் எதிரிகள் மீது கொடுக்கப்பட்ட பொய்யான புகாரின் அடிப்படையில் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு, எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

8.7.25

நீதித்துறை நடுவர் எண்-11
மயிலாடுதுறை